**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

அசல் வழக்கு எண். 95/2012

நாள் 13.12.2022

பெயர். சுந்தரமூர்த்தி த/பெ. சின்னராஜ்

வா.சா1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. என் தந்தையார் பெயர் சின்னராஜ், என் தாயார் பெயர் குமாரி ஆகும். என் தந்தையின் உடன் பிறந்தவர்கள் ஆனந்தன், தனகோட்டி என் தந்தை சின்னராஜ், கோவிந்தம்மாள் மற்றும் தரணி ஆகும். என் தந்தை சின்னராஜ் 1992ம் ஆண்டு அண்ணாமலை என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கினார் அந்த வகையில் எனக்கு உரிமை ஆகும். 1 பிரதிவாதி தனகோட்டி மனைவி என்றாலும் 2 முதல் 5 பிரதிவாதிகள் தனகோட்டியின் மகள்கள் என்றாலும் சரிதான்.

2. 6ம் பிரதிவாதி துளசி தனகோட்டியின் முதல் மனைவியின் மகள் ஆவார். இவ்வழக்கு சொத்தின் மீது 1 முதல் 5 பிரதிவாதிகள் இதே நீதிமன்றத்தில் என் தந்தை சின்னராஜ் மற்றும் தாயார் மீது அசல் வழக்கு எண்.82/1997 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி அசல் வழக்கில் 1முதல் 5ம பிரதிவாதிகள் இவ்வழக்கு சொத்து மற்றும் வேறு சொத்துக்களை உரிமை விளம்புகை மற்றும் சுவாதீனம் கோரி தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படி அசல் வழக்கு 82/1997ல் 1முதல் 5 பிரதிவாதிகளுக்கு அதரவாக இவ்வழக்கு சொத்து மற்றும் வேறு சொத்துக்களும் உரிமை விளம்புகை செய்து 28.1.1999ல் தீாப்பாகி விட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தந்தை மற்றும் தாயார் மேற்படி தீர்ப்பை எதிர்த்து ஆரணி சார்பு நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு வழக்கு எண்.27/99 தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி மேல்முறையீட்டு வழக்கும் 19.4.2005ல் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

4. என் தந்தை 2.3.2003ம் தேதி அன்று இறந்துவிட்டார். எந் தந்தை இறந்தபிறகு மேல்முறையீட்டு வழக்கை நானும் என் சகோதரரும் தரப்பினராக சேர்ந்து நடத்தினோம் என்றால் சரிதான். மேற்படி தீர்ப்பின் படி சுவாதீனம் கோரி நிறைவேற்றுகை மனு எண்.47/2009 1 முதல் 5 பிரதிவாதிகள் தாக்கல் செய்திருந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நிறைவேற்றுகை

மனுவில் நான் 6ம் எதிர்மனுதாரராக இருக்கிறேன் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

5. அதே போல் என் சகோதரர்களும் நிறைவேற்றுகை மனுவில் தரப்பினராக இருக்கிறார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி நிறைவேற்று கை மனுவில் நீதிமன்ற தீாப்பாணையின் படி 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு 9.6.2010தேதி அன்று சுவாதீனம் ஒப்படைத்து விட்டார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி சுவாதீனத்திற்கு பிறகு 1 முதல் 5 பிரதிவாதிகள் தான் வழக்கு சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

6. வழக்கு சொத்தை நான் தான் அனுபவித்து வருகிறேன் என்பதை காண்பிக்க ஆவணம் எதேனும் தாக்கல் செய்துள்ளேன்ா ன்றால் பத்திரம் மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் வழக்கு நிலுவையில் இருப்பதால் பட்டா வரி ரசீது ஆகியவை தாக்கல் செய்யவில்லை. என் பெயரில் உள்ள வரி ரசீதுகள் நான் வீட்டில் வைத்திருக்கிறேன்.

7. வா.சா.ஆ.1 கிரய பத்திரமானது என் தந்தைக்கு உரிமை இல்லாத அண்ணாமலை என்பவரிடம் இருந்து கிரயம் வாங்கி உள்ளார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணமானது வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 4 மற்றும் 5 ஆவணங்கள் அடமானம் பத்திரம் மற்றும் பைசல் ரசீது ஆகியவை மேல்முறையீட்டு வழக்கு நிலுவையில் இருந்தபோது நாங்களே உருவாக்கி கொண்டோம் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6 மற்றும் வா.சா.ஆ.7 ஆவணமானது மேல்முறையீட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு நாங்களே ஏற்படுத்தி கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல.

8. இதே வழக்கு சம்மந்தமாக 6ம் பிரதிவாதி அசல் வழக்கு எண் 20/2012 1 முதல் 5 பிரதிவாதிகள் மீது தாகக்கல் செய்துள்ளார்கள் என்றால் சாட்சி முதலில் அந்த வழக்கு 6ம் பிரதிவாதியே பாக பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளார் என்று சாட்சியம் அளித்து விட்டு சிறிது நேரம் கழித்து எனக்கு அந்த வழக்கை பற்றி எதுவும் தெரியாது என்று மாற்றி சாட்சியம் அளிக்கிறார். 6ம் பிரதிவாதி முன்னதாக நடந்த அசல் வழக்கின் தீாப்புகளை தெரிந்து கொண்டு அவர் தாக்கல் செய்த அசல் வழக்கை நடத்தாமல் விட்டுவிட்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

9. என் தந்தையின் உரிமையை அடிப்படையாக வைத்து தான் நான் இவ்வழக்கை உரிமை கோரி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என் தந்தைக்கே உரிமை இல்லை என்று முன்னதாக நடந்த அசல் வழக்கு எண் 82/97 வழக்கில் தீர்மானிக்கப்பட்டு விட்டதால் அவர் உரிமையை வைத்து இவ்வழக்கில் நான் உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல. மேல்முறையீட்டு வழக்கிலும் நிறைவேற்று மனுவிலும் நானும் ஒரு தரப்பினராக இருந்து கொண்டு அனைத்து விவரங்களும் தெரிந்து பொய்யாக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வமழக்கு மூலம் இல்லாமல் பொய்யாக தாக்கல் செய்த வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல
என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால்
திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு
சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால்
சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால்
சாட்சியின் கையெழுத்து.கைரேகை பெறப்பட்டது.

(ஒம்) பொ.தி. சதீஷ்குமார்
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஆரணி.